# இலங்கையில் தரமான குடிநீர் போத்தல் உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பில் அரசாங்க நிறுவனங்களின் பங்களிப்பு தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு அறிக்கை - 2012/ 2013



செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு பிரிவு

அறிக்கையின் இல. : வைஎஸ்/பீஈ/பிடபிள்யூ/2012/05

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

**திணைக்களம்**

## 01. நிறைவேற்றுப் பொழிப்பு

பண்டைக்காலம் தொட்டு இயற்கையான நீரை அவ்விதமே பாவனைக்கு எடுத்துக் கொண்ட இந்நாட்டு மக்கள் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை பயன்பாட்டிற்கு எடுப்பதில் தற்போது துரித நாட்டம் காட்டுவதற்கு அதிக நகரமயமாக்கல், கைத்தொழில்மயமாக்கல், சனத்தொகை அதிகரிப்பு, நுகர்வோர் கேள்வியில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் அருந்துவதற்குப் பொருத்தமான வீட்டு நீரை பெற்றுக்கொள்ளவதில் காணப்படுகின்ற சிக்கல்கள் போன்றன காரணங்களாக உள்ளன. இலங்கையில் காணப்படுகின்ற நீரை போத்தலில் அடைத்து புதுத் தோற்றத்துடன் சந்தைப்படுத்துதல் இற்றைக்கு ஏறத்தாழ 20 ஆண்டுகளிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது.

குடி நீரை போத்தல்களில் அடைக்கும் உற்பத்தி நிறுவனங்களை பதிவுசெய்தல் மற்றும் நடாத்திச்செல்லல் தொடர்பில் சட்டரீதியான அனுமதியினை வழங்குகின்ற அரசாங்க நிறுவனமான சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவு மற்றும் நீர் மூலங்கள் அமைந்துள்ள பிரதேசங்களிலுள்ள சுகாதார அதிகாரிகளின் கடமைப் பொறுப்புக்கள் தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1980 யூலை 25 ஆந் திகதிய 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டத்தின் படி நீர் ஒரு உணவு என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த நீர், மனித நுகர்வுக்கு ஏற்ற விதத்தில் காணப்படுகின்றதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு முறைகள் இதற்காக ஆராயப்பட்டது. நுண்ணங்கிகளின் விஞ்ஞான ரீதியான பாதுகாப்பு, இரசாயன ரீதியான பாதுகாப்பு, பௌதீக பாதுகாப்பு மற்றும் நியாயமான சமர்ப்பித்தல் இதன்போது பரிசீலனை செய்யப்பட்டன.

மேற்குறிப்பிட்ட தேவைகளைக் கருத்திற்கொண்டு தரமான குடிநீர் போத்தல்களின் உற்பத்தி தொடர்பில் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களின் பங்களிப்பை மதிப்பீடு செய்வதே இந்த செயலாற்றல் கணக்காய்வின் பிரதான குறிக்கோளாகும். இதற்காக 1980 யூலை 25 ஆந் திகதிய 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டம், 2005 ஆம் ஆண்டின் உணவு (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர்) தொடர்பான பிரமாணங்கள், 2010 ஆம் ஆண்டின் உணவு (பொதி செய்யப்பட்ட பொருட்கள்) தொடர்பான பிரமாணங்கள், 2005 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டு மற்றும் பிரசாரங்கள்) தொடர்பான பிரமாணங்கள் போன்ற ஏற்பாடுகள் அடங்கலான தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அவை கணக்காய்வு எடுகோள்களாக பயன்படுத்தப்பட்டன.

இக் கணக்காய்வு 2012 ஒக்தோபர் முதல் 2013 யூன் வரையான காலப்பகுதியில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வு அவதானிப்புக்களைப் பெற்றுக்கொள்கையில் எழுத்துமூலச்

சான்றுகளை சேகரித்தல், களப் பரிசோதனைகள், பௌதீக மெய்மையாய்வு, நேரடிக் கலந்துரையாடல்கள் மற்றும் நீர் மாதிரிகளை ஆய்வுகூடங்களில் பரிசோதித்து உறுதிப்படுத்திக் கொள்ளல் போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டன.

குடிநீரை போத்தலில் அடைக்கும் கைத்தொழிலிற்கு காணப்படுகின்ற சட்டங்களும் விதிகளும் உரிய வகையில் நடைமுறைப்படுத்தப்படாமை, அங்கீகரிக்கப்பட்ட பதிவினை மீறுதலும் உரிய காலத்தில் பதிவினை புதுப்பிக்காமையும், போதிய கண்காணிப்பு இடம்பெற்றிருக்காமை, செல்லுபடியான பதிவு இன்றி நீர் போத்தல்களை இறக்குமதி செய்தல், தரமான தண்ணீர் போத்தலொன்றில் காணப்பட வேண்டிய கூறுகள் எதிர்பார்க்கப்பட்ட அளவினைக் காட்டிலும் வேறுபட்டிருத்தல் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தண்ணீர் போத்தல்கள் தொடர்பில் உரிய கண்காணிப்புகள் இடம்பெற்றிருக்காமை போன்றன பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களாகும்.

ஊயர் தரத்திலான நீர் போத்தல்களை வழங்குவதற்கான பரிந்துரைகளாக மேலே குறிப்பிடப்பட்ட அதிகாரச்சட்டங்கள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளிற்கமைய சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவினால் தண்ணீர் போத்தல்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டிய முறையினைத் திட்டமிடுதல், அங்கீகரித்தல், நடைமுறைப்படுத்தல், எழுமாறாக சந்தை ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் என்பன உரிய கால இடைவெளிகளில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அந்த நடைமுறைகளிலிருந்து விலகிச் செயற்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பில் தவறுகளைத் திருத்திக்கொள்ளும் வரை உற்பத்தியை தடைசெய்தல், தண்டப்பணத்தை அறவிடுவதற்கு சட்ட ஏற்பாடுகளை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். இத் தேவைப்படுகளிற்கு இணங்க செயற்பட்டிருக்காமை காரணமாக எழுந்த கணக்காய்வு அவதானிப்புகள் விரிவாக இவ்வறிக்கையில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

## 2. அறிமுகம்

குடிநீர் மனிதனின் நிலைத்திருப்பிற்காக அத்தியாவசியமானதாக காணப்படுவதுடன் அது நிறமற்ற, தெளிவான, நாற்றமோ மணமோ அற்ற மற்றும் விசேட சுவையற்ற ஒன்றாக காணப்படுதல் வேண்டும். நீரானது புவியில் காணப்படுகின்ற வளங்களில் தராளமாக கிடைக்கின்ற வளமொன்றாக காணப்படினும், அதில் 1 சதவீதமான நீர் மாத்திரமே அருந்துவதற்கு பொருத்தமானதாக உள்ளது.

உலகம் முழுவதிலுமுள்ள அதிகமான மக்கள் அருந்துவதற்குப் பொருத்தமான நீரை தேடுகின்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் சில சந்தர்ப்பங்களில் பல்வேறு மூலங்களினூடாக நீரை பெற்றுக்கொள்வதுடன் அதிகமான மக்கள் அருந்தும் நீரின் தரம் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதில்லை. இவ்வாறான பல்வேறு நீர் மூலங்களையும் கருத்திற்கொள்கையில் அவை அருந்துவதற்குப் பொருத்தமற்றவையாக காணப்படுவதனால் மரணங்களுக்கும் அவ்வாறே ஏனைய பல நோய்களிற்கும் காரணமாக உள்ளது. இது இவ்வாறிருக்க அண்மைய காலம் வரை இயற்கை வளமாக காணப்பட்ட நீர், அதிக சனத்தொகை வளர்ச்சி, நகரமயமாக்கல், கைத்தொழில் மயமாக்கல், நுகர்வோர் சுவையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக நீரை போத்தல்களில் அடைத்து புதிய தோற்றத்துடன் சந்தைப்படுத்துவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீருக்குக் காணப்படுகின்ற கேள்வி அதிகரித்தமையைத் தொடர்ந்து அதனை உற்பத்தி செய்வதில் பொருத்தமான சுகாதார முறையொன்றின் தேவையினை இனங்கண்டு கொண்ட சுகாதார அமைச்சு 1980 யூலை 25 ஆந் திகதிய 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டத்தின் கீழ் 2005 இன் போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடி நீர் தொடர்பான பிரமாணங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அதற்கமைய, நீர் உணவொன்றாக கருதப்படுகின்றது. அதேவேளை சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம், இலங்கையினுள் உணவுகள் தொடர்பான பிரதான அதிகாரியாக உள்ளார். அவ்வாறே அவர் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்காக தாபிக்கப்பட்டுள்ள உணவுகள் ஆலோசனைச் சபையின் தலைவராகவும் காணப்படுவதுடன் உணவுகள் ஆலோசனைச் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் நிர்வாகப் பொறுப்பினையும் மேற்கொள்கின்றார். இந்த உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவின் குறிக்கோள்கள் வருமாறு.

(அ) மானிட பாதுகாப்பையும் ஆராக்கியத்தினையும் உறுதிப்படுத்துதல்

i. பாதுகாப்பானதும் தரமானதுமான உணவுகள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துதல்.

ii. உணவுகளின் நியமங்களும் பிரமாணங்களும் பேணப்படுவதனை உறுதிப்படுத்துதல்.

iii. கதிர்வீச்சு மற்றும் மரபணு பொறியியல் சிக்கல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்

(ஆ) பொருத்தமான மற்றும் நற் பழக்கவழக்கங்கங்களை உறுதிப்படுத்துதல்

i. நுண்ணங்கிகள்/இரசாயனச் சேர்க்கைகள் மாசுறுவதனைத் தடுத்தல்.

ii. உணவுகளை விற்பனை செய்கையில் எவையேனும் மாற்றங்கள் மற்றும் மோசடியான பழக்கங்கள் இடம்பெறுவதனைத் தடுத்தல்.

iii. ஒட்சியேற்றல்கள், நீண்டகாலம் பழுதடையாது வைத்திருப்பதற்கான பொருட்கள், தைலங்கள், சுவையூட்டிகள் மற்றும் வர்ணங்கள் போன்ற இரசாயனங்களை சேர்த்துக்கொள்வதில் தர்க்கரீதியான தன்மை.

iv. நாட்பட்ட உணவுகள் புதியனவாக அல்லது நல்ல நிலையில் இருப்பதாக காண்பிப்பதற்கு வர்ணங்கள், சுவையூட்டிகள், பழுதடையாது வைத்திருப்பதற்கான பொருட்கள் சேர்க்கப்படுவதன் தவறான பழக்கத்தினை நீக்குதல்.

(இ) போதியளவு பொதுச் சுகாதார கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்ததல்.

i. பாதுகாப்புமிக்க மற்றும் மாசுறுதலுக்கு உட்படாத பிரதேசங்களில் உணவுகள் பயிரிடப்பட்டுள்ளன என்றும் அறுவடை செய்யப்பட்டுள்ளன என்றும்.

ii. வண்டுகள், வன விலங்குகள் மற்றும் மாசடைவதிருந்து உணவுகளைப் பாதுகாத்தல்.

iii. பாவனைக்குதவாத இறைச்சிகளை பரிசோதித்தல், பால் உற்பத்தி அல்லது விநியோக சேவைகள் மற்றும் இறைச்சிக்காக கால்நடைகளை அறுக்கும் இடங்களின் சுகாதாரக் கட்டுப்பாடுகள்.

iv. களை கொள்ளிகளின் நியாயமான பாவனை

(ஈ) உணவுக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

i. ஏற்றுமதி வியாபாரத்தை பாதுகாத்தல்.

ii. தரத்தில் குறைந்த/எதிர்பார்த்த அளவில் காணப்படாத அல்லது பொருத்தமற்ற உணவுகள் இறக்குமதி செய்யப்படுவதிலிருந்து பாதுகாப்பளித்தல்

## 2.1 கணக்காய்வு நோக்கெல்லை

பின்வரும் விடயங்கள் கருத்திலெடுக்கப்பட்டு அவதானம் செலுத்தப்பட்டது.

(அ) எமது விடயப்பரப்பு மேல் மாகாணத்தின் கொழும்பு மற்றும் கம்பஹ மாவட்டங்களிற்கும் வடமேல் மாகாணத்தின் குருணாகல் மாவட்டத்திற்கும் வரையறுக்கப்பட்டது.

(ஆ) கணக்காய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட 2012 ஒக்தோபர் 12 ஆந் திகதியளவில் சுகாதார அமைச்சில் பதிவுசெய்யப்பட்டிருந்த போத்தலில் அடைக்கப்பட்ட 69 நீர் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வு ஆரம்பிக்கப்பட்டது.

(இ) பொருண்மையானவை எனக் கருதப்பட்ட மற்றும் அவை தொடர்பில் நியாயமான முடிவுக்கு வரமுடியுமானதாக காணப்பட்ட குறித்த சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எம்மால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் உற்பத்தித் திறனுடன் தொடர்புடையதாக காணப்படுகின்ற பரிந்துரைகள் மற்றும் முடிவுரைகள் என்பன கணக்காய்வு அவதானிப்புக்கள் மற்றும் காண்புகளின் அடிப்படையில் அமையப்பெற்றனவாகும்.

## 2.2 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 2.3 கணக்காய்விற்காக விடயப்பரப்பை தேர்ந்தெடுப்பதற்கான காரணங்கள்

மனித அடிப்படைத் தேவைகளில் காற்றை தவிர்த்து வாழ்க்கைச் சுற்றோட்டத்தை பேணிச்செல்வதற்கான இன்றியமையாத தேவையாக நீர் காணப்படுகின்றது. அதிக நகரமயமாக்கல், கைத்தொழில்மயமாக்கல், சனத்தொகை அதிகரிப்பு, நுகர்வுச் சுற்றோட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் நுகர்வோர் கேள்வியின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் இயற்கையாக அருமையற்ற வளமொன்றாக காணப்படுகின்ற நீரை போத்தலில் அடைத்து புதுத் தோற்றத்துடன் சந்தைப்படுத்துவதற்கு தற்போது பல்வேறுபட்ட வணிக நிறுவனங்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வணிகர்கள் துரிதமாக போத்தலில் அடைக்கப்பட்ட நீர் கைத்தொழிலில் ஈடுபட்டமை காரணமாக அதில் காணப்படுகின்ற தரம் தொடர்பில் கவனம் செலுத்துதல் காலத்தின் தேவையாக உள்ளது. தற்போது இத்தொழில் தொடர்பில் எழுந்துள்ள பல்வேறு பிரச்சினைகள் ஊடகங்களினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நீர் என்ற அத்தியாவசியத் தேவையின் முக்கியத்துவம் தொடர்பில் கருத்திற்கொள்கையில் அவ்வாறான பிரச்சினைகளிற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டப் பிரமாணங்களின் பிரகாரம் குறித்த அரசாங்க நிறுவனங்கள் செயற்பட்டுள்ளனவா என்பதனையும் எதிர்காலத்தில் இத் தொழிலை மேலும் முறைப்படுத்தவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனையும் பரிசோதித்தல் இத் தலைப்பினை தேர்ந்தெடுப்பதற்கு காரணமாக அமைந்திருந்தது.

## 2.4 கணக்காய்வுப் பிரவேசம்

கணக்காய்வுப் பிரவேசத்திற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளும் அடிப்படைகளும் கருத்திற்கொள்ளப்பட்டன.

- 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டம், 1991 இன் 20 ஆம் இலக்க (திருத்திய) உணவு அதிகாரச்சட்டம், 2011 இன் 29 ஆம் இலக்க (திருத்திய) உணவு அதிகாரச்சட்டம், 2005 ஆம் ஆண்டின் உணவு (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர்) தொடர்பான பிரமாணங்கள், 2005 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டு மற்றும் பிரசாரங்கள்) தொடர்பான பிரமாணங்கள், 2010 ஆம் ஆண்டின் உணவு (பொதி செய்யப்பட்ட பொருட்கள்) தொடர்பான பிரமாணங்கள்.
- 894 மற்றும் 614 ஆம் இலக்க இலங்கை தர நியமங்கள்
- ஏனைய தொடர்புடைய ஆவணங்களின் மீளாய்வும் தொடர்புடைய உத்தியோகத்தர்களை விசாரணை செய்தலும்.
    i. போத்தலில் அடைக்கப்பட்ட நீர் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சகல நபர்கள்/அமைப்புக்கள் அதற்காக பிரதான உணவுக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து 2005 ஆம் ஆண்டின் உணவு (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர்) தொடர்பான பிரமாணம் 3(4) ஆம் பந்தியின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பது
    ii. 2005 ஆம் ஆண்டின் உணவு (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர்) தொடர்பான பிரமாணம் IV ஆம் பட்டோலையின் B படிவத்தின் பிரகாரம் பௌதீக இரசாயனவியல் நுண்ணுயிர்கள் விஞ்ஞான தேவைப்பாடுகள் காண்பிக்கப்பட்டுள்ளதா என்பது
    iii. 2005 ஆம் ஆண்டின் உணவு (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர்) தொடர்பான பிரமாணம் III ஆம் பகுதியின் 13 ஆம் அத்தியாயத்தின் தேவைப்பாட்டிற்கு இணங்க நீர் போத்தலில் அடைக்கப்பட்டுள்ளது அல்லது பொதியிடப்பட்டுள்ளது என்பது
    iv. அதிகாரமுள்ள உத்தியோகத்தர்களினால் நீரை போத்தலில் அடைக்கின்ற தொழிற்சாலைகள் அவதானிப்புச் செய்யப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை.
    v. இறக்குமதி செய்யப்படுகின்ற கனியுப்புக்கள் அடங்கிய குடி நீர் தொடர்பில் உணவுகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பது.

### 2.5 வரையறைகள்

இந்த கணக்காய்வை திட்டமிடுகையில் நோக்கெல்லையின் வரையறைகளை குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. இங்கு குடிநீர் போத்தல் தொழிற்சாலைகள் தனியார் நிறுவனங்களாக காணப்பட்டமையால் அவற்றை பரிசோதித்தல் தொடர்புடைய சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் ஊடாக பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்பட்டது. அதன்போது தொழிற்சாலைகள் மற்றும் சந்தை ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தமை, பெற்றுக்கொள்ளப்பட்ட நீர் மாதிரிகளை இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் சமர்ப்பித்து ஆய்வுகூட பகுப்பாய்வு அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கையில் ஒருசில ஆய்வுகூட பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் போதியளவு வசதிகள் காணப்படாமை, நீர் மூலங்கள் தொடர்பில் குறித்த அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவா எனப் பரிசோதிக்கையில் தொடர்புடைய பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஊடாக அத் தகவல்களை பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தமை, பதவியணியினர் மற்றும் ஏனைய வளங்களின் வரையறைகள், நீர் மூலங்கள் மற்றும் தொழிற்சாலைகளை பரிசோதித்தல் தெரிவுக்கு வரையறுக்கப்பட்டிருந்தமை போன்ற காரணங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பையும் நியாயமான சந்தைப் போட்டியையும் ஏற்படுத்தும் நோக்குடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்ற பாவனையாளர் சேவைகள் அதிகாரசபையினால் இதற்காக நிறைவேற்றப்படுகின்ற பணிகள் தொடர்பான விபரங்களும் தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை போன்ற காரணங்கள் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும்.

## 3. விபரமான கணக்காய்வுக் காண்புகள், பரிந்துரைகள் மற்றும் நிறுவனத்தின் கருத்துரைகள்

### 3.1 செல்லுபடியான பதிவுச்சான்றிதழின்றி போத்தலில் அடைக்கப்பட்ட நீர் உற்பத்தியில் ஈடுபடுதல்

2005 ஆம் ஆண்டின் உணவு (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர்) தொடர்பான பிரமாணம் 3(4) ஆம் பந்தியின் பிரகாரம் ஏதேனுமோர் இடம் பிரதான உணவுகள் அதிகாரியினால் பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி எந்தவொரு நபரினாலும் அந்த இடத்தினை குடிநீரை போத்தலில் அடைப்பதற்கு அல்லது பொதி செய்தலுக்கு பயன்படுத்தக் கூடாது. தற்போது போத்திலில் அடைக்கப்பட்ட நீர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் இத்தேவைப்பாட்டிற்கு இணங்க நடவடிக்கை எடுத்துள்ளனவா என்பது குறித்து பரிசோதிக்கையில் பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன.

(அ) தற்போது சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் போத்திலில் அடைக்கப்படுகின்ற நீர் உற்பத்தித் தொழிற்சாலைகளை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தின் அதிகூடிய செல்லுபடியாகும் காலம் 03 ஆண்டுகளாக காணப்படுவதுடன் வியாபாரத்தை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்காக

செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த பின்னர் பதிவினை மீண்டும் புதுப்பித்தல் வேண்டும். இதன் படி 2012 ஒக்தோபர் 12 ஆந் திகதியளவில் சுகாதார அமைச்சின் இணைய தளத்தில் குடிநீரை போத்தலில் அடைக்கும் உற்பத்தியாளர்களின் பட்டியல் அவதானிக்கப்பட்டதுடன் அங்கு பதிவுசெய்யப்பட்டுள்ள உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை (நீர் மூலங்களின் எண்ணிக்கை) 69 ஆக காணப்பட்டது.

(ஆ) இதனுடன் இணைந்ததாக உணவு தரப்படுத்தல்களில் ஈடுபட்டுள்ள அரசாங்க நிறுவனங்களான இலங்கை தரப்படுத்தல் நிறுவனத்தில் 2012 திசெம்பர் 28 ஆந் திகதி வரை பதிவுசெய்து அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டுள்ள குடிநீரை போத்தலில் அடைக்கும் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை 59 ஆக உள்ளமை அவதானிக்கப்பட்டது. அத்திகதியில் உள்ளவாறு இந்த அனுமதிப்பத்திரதாரர்கள் சுகாதார அமைச்சில் பதிவுசெய்யப்பட்டுள்ளமை தொடர்பான பரிசோதனையில் அதில் 06 அனுமதிப்பத்திரதாரர்கள் சுகாதார அமைச்சின் செல்லுபடியான பதிவுசெய்தலின்றி காணப்பட்டமையும் அவர்களால் முன்னைய பதிவுசெய்தலின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த இலக்கத்தினைப் பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. சுகாதார அமைச்சில் பதிவுக் காலம் கடந்திருந்த போதிலும், இலங்கை தரப்படுத்தல் நிறுவனத்தில் பதிவுச் சான்றிதழைப் பெற்று (2012 திசெம்பர் 28 ஆந் திகதியில் உள்ளவாறு) உற்பத்தி நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும் நிறுவனங்களின் விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சுகாதார அமைச்சின் பதிவு இலக்கமும் திகதியும் | பதிவுக் காலத்தை மீறியுள்ள காலப்பகுதி (2012.10.12 இல் உள்ளவாறு) |
|---|---|
| CFA/BW/65/2007-04<br>2007.04.24 | 2 ½ ஆண்டுகள் |
| CFA/BW/75/2007-07<br>2007.07.09 | 02 ஆண்டுகள் |
| CFA/BW/10/2006-07<br>2006.07.28 | 03 ஆண்டுகள் |
| CFA/BW/43/2006-11<br>2006.11.10 | 03 ஆண்டுகள் |
| CFA/BW/84/2007-10<br>2007.10.03 | 02 ஆண்டுகள் |
| CFA/BW/14/2006-07<br>2006.07.28 | 03 ஆண்டுகள் |

(இ) 2005 நவம்பர் 21 ஆந் திகதிய 1420/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டின் போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர் தொடர்பான பிரமாணத்தின் பிரகாரம் சுகாதார அமைச்சில் பதிவுசெய்யப்பட்டு உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள மற்றும் 2008 ஏப்ரல் 23 ஆந் திகதியளவில் பதிவுசெய்து கொண்டுள்ள குடிநீர் போத்தல் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை 97 ஆக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2008 ஏப்ரல் 23 ஆந் திகதியளவில் பதிவுசெய்து கொண்டிருந்த உற்பத்தியாளர்களில் 59 பேர் 2012 ஒக்தோபர் 12 ஆந் திகதியளவில் செல்லுபடியான பதிவினைப் பெற்றுக்கொண்டோர்களது பட்டியலில் காணப்படாமை அவதானிக்கப்பட்டது.
இருப்பினும் அவர்களில் 08 பேர் சுகாதார அமைச்சின் செல்லுபடியான பதிவுச் சான்றிதழின்றி தமது உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு சந்தைப்படுத்தியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(உ) உற்பத்தியாளர்கள் தங்களது விண்ணப்பங்களை உரிய தேவைப்பாடுகளைப் பூரணப்படுத்தி சமர்ப்பிக்காதிருந்தமை, முன்னைய பதிவுக் காலம் முடிவடைவதற்கு முன்னர் (ஆறு மாதங்களிற்கு முன்னர்) பதிவுக்காக விண்ணப்பிக்காமை, பிரதேசத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து தகவல்களைக் கோருவதில் காணப்பட்ட தாமதம் மற்றும் அந்த உத்தியோகத்தர்களினால் தகவல்களை வழங்குவதில் காணப்பட்ட தாமதம் போன்றன மேற்குறிப்பிட்டவாறு செல்லுபடியான பதிவுசெய்தலின்றி உற்பத்தி நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு பங்களித்திருந்த காரணங்களாகும் என்பது அவதானிக்கப்பட்டது. இவ்வாறு சகல தரப்பினர்களினாலும் செய்யப்படுகின்ற தாமதங்கள் மற்றும் குறிப்பிட்ட பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களின் கண்காணிப்பிலுள்ள குறைபாடுகள் காரணமாக செல்லுபடியான பதிவின்றி தண்ணீர் போத்தல் உற்பத்தியாளர்களிற்கு தமது உற்பத்தி நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. (பின்னிணைப்பு I மற்றும் II)

(ஊ) அவ்வாறே செல்லுபடியான பதிவுக் காலத்தின் பின்னர் பதிவினைப் புதுப்பிக்கையில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எவையென்பது தொடர்பில் 2005 ஆம் ஆண்டின் போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர் தொடர்பான பிரமாணத்தில் காண்பிக்கப்படாதிருந்ததுடன் அப்பிரிவில் தண்ணீர் போத்தல்களை உற்பத்தி செய்யும் இடத்தின் பதிவு செய்யும் சான்றிதழில் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளமை போதியதாக இல்லாமை அவதானிக்கப்பட்டது.

**சுட்டிக்காட்டல்கள்**

i. இத் தண்ணீரை அருந்துவதனால் மக்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமை

ii. நாட்டில் அமுலிலுள்ள சட்டங்கள் விதிகள் தொடர்பில் குடிநீர் போத்தல் உற்பத்தியாளர்களைப் போலவே உத்தியோகத்தர்கள் மத்தியிலும் காணப்படுகின்ற கவனயீனம் காரணமாக ஏற்படும் பாதகாமான தாக்கங்கள்.

iii. பிரதேச உத்தியோகத்தர்களிடமிருந்து அறிக்கைகளை கோருகையிலும் அவர்களால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும் போதும் அவை வினைத்திறனாக இடம்பெற்றிருக்காமை காரணமாக இத் தொழிலை முறைப்படியாக நடாத்திச் செல்வதற்கு தேவையான தகவல்கள் கிடைக்கப்பெறாமை.

iv. 1980 இன் 26 ஆம் இலக்க மற்றும் 2011 இன் 29 ஆம் இலக்க உணவு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ள உணவு ஆலோசனைச் சபைகளில் செயற்படுகின்ற உணவு உற்பத்தியினையும் அதன் தரத்தினையும் பேணிச் செல்வதற்காக சட்டரீதியாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சுகாதார அமைச்சு, இலங்கை தரப்படுத்தல் நிறுவனம், பாவனையாளர் சேவைகள் அதிகாரசபை போன்ற நிறுவனங்களிடையே துறைசார்ந்த முக்கியமான தகவல்கள் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பரிமாறிக்கொள்ளப்பட்டிருக்காமை.

**பரிந்துரைகள்**

i. பதிவுசெய்யப்பட்ட சான்றிதழொன்று அடங்கலாக செல்லுபடியாகும் காலம் முடிவடைவதற்கு 06 மாதங்களிற்கு முன்னர் பதிவுக்காக விண்ணப்பித்தல் வேண்டுமெனக் கூறும் கூற்றை 2005 ஆம் ஆண்டின் (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட) குடிநீர் தொடர்பான பிரமாணத்தில் உள்ளடக்கி அதற்கு சட்டரீதியான அந்தஸ்த்தினை பெற்றுக்கொடுப்பதுடன் தாமதிக்கும் ஒவ்வொரு மாதத்திற்காகவும் குறித்துரைத்த தாமதக் கட்டணமொன்றை தீர்மானித்து அதனை அறவிடுவதற்கான நடைமுறையொன்றை தயாரித்தல்.

ii. பதிவுக் காலம் முடிவடைந்துள்ள உற்பத்தி நிறுவனங்கள் தொடர்பில் பிரதேச உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் குறித்த உற்பத்தியாளர்கள் அது வரை பதிவினை புதுப்பிப்பதற்காக விண்ணப்பித்திருப்பின் மீண்டும் பதிவினை வழங்கும் வரை அவர்களது உற்பத்திகளின் தரம் (இரசாயண மற்றும் நுண்ணங்கிகள் இணக்கப்பாடு) உரிய நியமத்தில் காணப்படுகின்றதா என்பதனை

உறுதிப்படுத்திக்கொள்வதற்காக குறித்த காலவீச்செல்லையில் தொடர்புடைய உற்பத்திகள் மற்றும் நீர் மூலங்களை நுண்ணங்கிகள் மற்றும் இராசயண பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கையினை பெற்றுக்கொள்தல்.

iii. பரிசோதனை அறிக்கைகளை விரைவாகப் பெற்றுக்கொள்ளல் அவ்வாறே வழங்குவதற்கான தேவையினை சகல உத்தியோகத்தர்களினதும் கவனத்திற்குக் கொண்டுவருதல்.

iv. இலங்கை தரப்படுத்தல் நிறுவனம், தண்ணீரை பொதிசெய்வோருக்கு வழங்கியுள்ள அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கையில் சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவினது இணைய தளத்திலுள்ள நாளதுவரையாக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட தண்ணீரை பொதியிடுவோரின் பட்டியல் தொடர்பில் கண்டிப்பாக கவனம் செலுத்துதல் வேண்டுமென உணவு ஆலோசனை குழுவை அறிவுறுத்துதல்.

**நிறுவனத்தின் கருத்துரை**

பந்தி 3.1 (அ) “2014.08.15 ஆந் திகதிய நாளதுவரையாக்கப்பட்ட பட்டியல் தகவல்கள் உள்ளன”

(ஆ) திருத்தப்படுதல் வேண்டும். கணக்காய்வு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தினைக் கருத்திற்கொண்டு காணப்பட்ட பின்வரும் விண்ணப்பங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்திருந்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பின்னர் கீழுள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| பதிவு இல. | விபரம் |
|---|---|
| CFA/BW/65/2012 - 04 | புதிய நீர் மூலமொன்றை நிர்மாணிக்கும் உறுதிமொழியின் அடிப்படையில் 2013 யூலை 23 ஆந் திகதியிலிருந்து ஓராண்டிற்கு பதிவு வழங்கப்பட்டிருந்தது. புதிய நீர் மூலத்திற்காக பதிவினை வழங்குவதற்கு விண்ணப்பம் ஆராயப்பட்டு வருகின்றது. |
| CFA/BW/75/2007 - 07 | விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. |
| CFA/BW/10/2006 - 07 | விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. |
| CFA/BW/43/2006 - 11 | 2013 பெப்ரவரி 15 ஆந் திகதியிலிருந்து பதிவு வழங்கப்பட்டுள்ளது. |
| CFA/BW/84/2007 - 10 | ஹோட்டல் வளவில் மாத்திரம் இலவசமாக வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| CFA/BW/14/2006 - 07 | விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. |

(உ) (ஊ) "இணங்க முடியாத போதிலும், அரைவாசி உண்மையாகும். பிரமாணத்தில் குறைபாடுகள் காணப்பட்ட போதிலும், காணப்படுகின்ற சட்டப் பிண்ணனியை மீறி நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. சகல பிரஜைகளும் காணப்படுகின்ற சட்டத்திற்குக் கீழ்படிதல் வேண்டும்."

**பரிந்துரை** 1:- "தாமதக் கட்டணத்தை அறவிடுவதன் மூலம் நீரின் தரத்திற்கு தாக்கம் ஏற்படாதிருப்பினும், தரக்கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்கு உபாயங்கள் ஏற்பட முடியுமென எதிர்பார்க்க முடியும்."

**பரிந்துரை 2:-** "இலங்கை தரப்படுத்தல் நிறுவனத்தை அறிவுறுத்துதல் வேண்டும்."

## 3.2 பௌதீக, இரசாயன மற்றும் நுண்ணங்கிகள் விஞ்ஞான இணக்கப்பாடு.

குடிநீர் போத்தல்கள் தொடர்பில் அதன் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பரிசோதனையில் தொடர்புடைய கூறுகள் எதிர்பார்த்த மட்டத்தில் காணப்படுதல் வேண்டும். அது தொடர்பில் அவதானிக்கப்பட்ட நிலமைகள் கீழே தரப்பட்டுள்ள.

(அ) போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீரில் காணப்படும் பௌதீக, இரசாயன மற்றும் நுண்ணங்கி விஞ்ஞான இணக்கப்பாடு தொடர்பில் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவினால் 2005 ஆம் ஆண்டின் (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர்) தொடர்பான பிரமாணத்தின் தேவைப்பாடுகளின் படி எவ்வாறு செயற்படும் என மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் உற்பத்தியாளருக்கு குறித்த பதிவை வழங்குவதற்கு முன்னர் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் நீர் மூலங்களிலுள்ள இணக்கப்பாடுகள் 614 ஆம் இலக்க இலங்கை தரக்கட்டளையின் பிரகாரமும், இறுதி உற்பத்திப் பொருளிலுள்ள இணக்கப்பாடுகள் 894 ஆம் இலக்க இலங்கை தரக்கட்டளையின் பிரகாரமும் பூரணப்படுத்தப்பட்டுள்ளனவா என்பது மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்தும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற அறிக்கைகளின் பிரகாரம் பரீட்சிக்கப்படுகின்றது.

(ஆ) இருப்பினும், கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட கோவைகளின் பிரகாரம் சில சந்தர்ப்பங்களில் பௌதீக, இரசாயன மற்றும் நுண்ணங்கி விஞ்ஞான தேவைப்பாடுகள்

பூரணத்துவம் தொடர்பில் காண்பிக்கப்பட்டுள்ள அவதானம் அவர்களால் மேற்கொள்ளப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. சுகாதார அமைச்சினால் பதிவுசெய்யப்பட்டிருந்த உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி நடவடிக்கைகளை உரிய தரத்திலும் குறித்த நியமங்களின் பிரகாரமும் மேற்கொள்கின்றனரா என்ற விடயம் தொடர்பில் உணவுக் கட்டுப்பாட்டு பிரிவின் நேரடியான கண்காணிப்பு இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே பதிவுசெய்யப்பட்டதன் பின்னர் சில இணக்கமின்மைகள் தொடர்பில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் நிலவுகின்றமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

உதாரணமாக: 2007 யூலை 09 ஆந் திகதிய CFA/BW/75/2007-07 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள குடிநீர் போத்தல் உற்பத்தியாளரின் பதிவுக் காலம் 2010 யூலை மாதத்தில் முடிவடைந்திருந்த போதிலும், அவரால் தொடர்ந்தும் நீர் போத்தல்கள் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டிருந்தது. திறந்த சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த இந்த நீர் போத்தல்களிலிருந்து கொழும்பு மாநகர சபையின் உணவுப் பரிசோதகர்களினால் ஆய்வுகூடப் பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்பட்டு பெறப்பட்டிருந்த ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையின் படி அந்த நீரில் கோலிபோம் இன் அளவு எதிர்பார்த்த அளவினை விட அதிகமாகக் காணப்பட்டது. அத்துடன் இது பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கு மிகத் தீங்கிழைக்கும் நிலையாகும் என்பதும் அவதானிக்கப்பட்டது.

இந்த ஆய்வுகூட பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தண்ணீர் போத்தல்களின் (1000 மி.லீற்றர்) உற்பத்தித் திகதி 2012 செப்தெம்பர் 25 ஆந் திகதி என்பதும் காலாவதியாகும் திகதி 2013 செப்தெம்பர் 24 ஆந் திகதி என்பதும் ஆய்வுகூட அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. இதன்படி, இந்த உற்பத்தியாளரது சுகாதார அமைச்சின் செல்லுபடியாகும் பதிவுக்கால எல்லை முடிவடைந்திருந்த போதிலும், தொடர்ந்தும் குடிநீர் போத்தல் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தமையும் இது தொடர்பில் பொறுப்புவாய்ந்த எத்தரப்பினரதும் கவம் அதன் மீது செலுத்தப்பட்டிருக்கவில்லைஎன்பதும் அவதானிக்கப்பட்டது. அத்துடன், இந்த உற்பத்தியாளர், 2012 நவம்பர் 16 ஆந் திகதியளவில் இலங்கை தரப்படுத்தல் நிறுவனத்தின் அனுமதிப்பத்திரம் பெற்றவர் என்பதும் அவதானிக்கப்பட்டது.

(இ) சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவினால் தமது இணையதளத்தின் ஊடாக செல்லுபடியான நீர் போத்தல் உற்பத்தியாளர்களின் பட்டியலை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் அறிந்துகொள்வதற்கு கொழும்பு மாநகரசபைக்குச் சொந்தமான மருதானையிலுள்ள மத்திய உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவிடம் கணனி வசதி இல்லாதிருப்பதும், வேறு எந்த விதத்திலும் இது குறித்து அவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதும் 2012 ஒக்தோபர் 26 ஆந் திகதி அப் பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலின் போது வெளிப்பட்டது.

(ஈ) உற்பத்தி நிறுவனங்களில் பீ.எச். பெறுமதி நாள்தோரும் பரிசோதிக்கப்பட்டு அறிக்கை வைத்திருக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அறிக்கை வைத்திருக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்களும் பௌதீக பரிசோதனையின் போது அந்த வீச்செல்லையில் காணப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டமை தரக் கட்டுப்பாட்டு விபரங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அதன் படி, 2013 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டவாறு 6.5 இற்கும் 8.5 இற்கும் இடையில் காணப்பட வேண்டிய பீ.எச். பெறுமதி தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மூன்று வியாபாரங்களின் கீழான மூன்று உற்பத்திப் பொருட்களில் முறையே 5.7, 5.5 மற்றும் 5.5 எனக் காணப்பட்டதுடன் மேலுமோர் உற்பத்தி நிறுவனத்தின் மூன்று நாட்களினுள் அப் பெறுமதி பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**சுட்டிக்காட்டல்**

உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவினதும் அவ்வாறே பிரதேசங்களினதும் உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகையில் வினைத்திறனாக செயற்பட்டிருக்காமை மற்றும் பிரதேச உத்தியோகத்தர்களின் தரக் கட்டுப்பாட்டுக் கருமங்கள் போதியளவில் இல்லாமை காரணமாக பாதகமான நிலைமை ஏற்படுதல்.

**பரிந்துரைகள்**

i. பொறுப்புவாய்ந்த சகல உத்தியோகத்தர்களும், அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளின் அடிப்படையிலமைந்த சகல உத்தியோகபூர்வ கடமைகளையும் தவறாது மேற்கொள்ள வேண்டுமென அறிவித்தல்.

ii. நாளதுவரையாக்கப்பட்ட நீர் போத்தல் உற்பத்தியாளர்களின் பட்டியலை குறைந்தது 06 மாதங்களிற்கு ஒரு முறையேனும் பிரதேச உத்தியோகத்தர்களிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்

iii. உணவு மதியுரைச் சபையில் செயற்படுகின்ற நிறுவனங்களிற்கிடையே முக்கியமான தகவல்களை தாமதிக்காது பரிமாறிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

**நிறுவனத்தின் கருத்துரை**

பரிந்துரை 1:- "காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட வசதியினுள் முன்னுரிமையளிக்கப்பட வேண்டிய ஏனைய உத்தியோகபூர்வ பணிகள் காணப்படுவதனால் ஒட்டுமொத்த கடமைப் பொறுப்புக்களையும் இனங்கண்டு உபாய ரீதியில் முன்னுரிமையினை இனங்கண்டு செயற்பட வேண்டிய தேவையுள்ளது."

பரிந்துரை 2:- "அண்ணளவாக 3 மாதங்களிற்கு ஒரு முறை நாளதுவரையாக்கப்பட்ட பட்டியல் இணைய தளத்தினூடாக பிரசித்தப்படுத்தப்படுகின்றது. 2014.08.15 ஆந் திகதியிலுள்ளவாறு நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடு (பின்னிணைப்பு 1) உள்ளது."

## 3.3 காலாவதியாகும் திகதி

உற்பத்தி செய்யப்பட்ட நீர் போத்தல்களின் காலாவதியாகும் திகதி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் சில தண்ணீர் போத்தல் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளிற்காக ஓராண்டுகால ஆயுட்காலத்தை தீர்மானித்திருந்ததுடன் (உற்பத்தி செய்யப்பட்ட திகதிக்கும் காலாவதிகாகும் திகதிக்கும் இடையிலான வித்தியாசம்) சில உற்பத்தியாளர்கள் அதற்கும் மேற்பட்ட காலத்தை குறிப்பிட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

ஒத்த உற்பத்தி செயன்முறையின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்ற குடி நீர் போத்தல்களின் ஆயுட் காலங்கள் ஆறு மாதம், 1 ½ ஆண்டுகள், 02 ஆண்டுகள் போன்ற பல்வேறுபட்ட காலவீச்சில் காணப்பட்டமை சர்ச்சைக்குரிய விடயமாக உள்ளது. அவ்வாறே, குடிநீர் போத்தலொன்றின் பயன்தரு ஆயுட்காலத்தினை தீர்மானிப்பதற்கு நிச்சயிக்கப்பட்ட முறையொன்று சுகாதார அமைச்சிடம் காணப்படாமையும் அது உற்பத்தியாளரின் விருப்பத்திற்கேற்ப தீர்மானிக்கப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

நிச்சயிக்கப்பட்ட முறையொன்று அல்லது நியமமொன்றின்றி தீர்மானிக்கப்படுகின்ற காலாவதியாகும் திகதி தொடர்பான சிக்கல் நிலை ஆரோக்கியத்திற்கு அச்சுறுத்தலாக காணப்படுகின்றமையும் இது தொடர்பில் சுகாதார அமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

**சுட்டிக்காட்டல்**

நியமமொன்றின்றி காலாவதியாகும் திகதி குறிப்பிடப்பட்டுள்ள தண்ணீர் போத்தல்கள் சந்தைக்கு வருகின்றமையால் தரத்தில் மாற்றங்கள் ஏற்படுகையில் மேற்கொள்ளப்படக் கூடிய சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கையில் சிக்கல்கள் ஏற்பட முடியுமாயிருத்தல்.

**பரிந்துரைகள்**

போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதியிடப்பட்ட தண்ணீர் போத்தல்கள் தொடர்பில் காலாவதியாகும் திகதியினைத் தீர்மானிக்கையில் அதனை உற்பத்தியாளரே தீர்மானிப்பதற்கு இடமளித்து அதன் மூலம் கட்டுப்பாட்டை மேற்கொள்தல் தற்போது பின்பற்றப்படுகின்ற நடைமுறையாகும் என்பது தெளிவாக உள்ள போதிலும், சுகாதார அமைச்சினால் அது தொடர்பில் தெளிவான கொள்கையொன்றை நிறுவுதல்.

**நிறுவனத்தின் கருத்துரை**

**பந்தி 3.3**

''உற்பத்திப்பொருளின் ஆயுட்காலம் தொடர்பான பொறுப்பு உற்பத்தியாளருக்குரியதாகும். இருப்பினும், எதிர்காலத்தில் ஒரே விதமான ஆயுட்காலத்தை குறிப்பிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது''

**3.4 பிரமாணங்களின் பிரகாரம் சுட்டுத்துண்டிடுதல்.**

1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் படியும் உணவுகள் (சுட்டுத்துண்டிடுதல் மற்றும் பொதியிடல்) தொடர்பான 2005 இன் பிரமாணங்களில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரமும் மேற்கொள்ளப்பட்ட பௌதீக தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) தண்ணீர் போத்தல்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனமொன்றினால் அங்கீகாரத்திற்காக சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சுட்டுத்துண்டினை பரிசோதிக்கும் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

i. 19 லீற்றர் போத்தலிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த சுற்றுத்துண்டின் பிரகாரம் அந்த சுற்றுத்துண்டின் மீது குடிப்பதற்குச் சிறந்த போத்தலில் அடைக்கப்பட்ட நீர் வழங்குனர் என்ற வசனம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் உற்பத்தியாளர் தனது உற்பத்திப்பொருளின் மதிப்பை அதிகரிப்பதற்கு முயற்சித்துள்ளமையால் அது 1980

இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவிற்கு முரணானது என்பது அவதானிக்கப்பட்டது.

ii. 5000 மில்லி லீற்றர் போத்தலில் 2006 தெற்காசிய விளையாட்டு விழாவிற்கான உத்தியோகபூர்வ நீர் போத்தல் வழங்குனர் என்ற உருவப்படத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இதுவும் குறித்த உற்பத்திப்பொருளின் மதிப்பை அதிகரிப்பதற்கான முயற்சியாக காணப்பட்டமையால் இந் நிலைமை சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டிய நிலைமையாகும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) குடிநீர் போத்தல் உற்பத்தி தொழிற்சாலையொன்றை நேரடிப் பரிசோதனைக்கு உட்படுத்தியதில் அங்கு போத்தல்களில் ஒட்டுவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த சுட்டுத்துண்டுகள் தொடர்பில் பின்வரும் மேலதிக விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 19 லீற்றர் போத்தலிற்காக வேறுபட்ட உருவப்படங்கள் மற்றும் மற்றும் படிவங்களுடன் கூடிய இரண்டு வகையான சுற்றுத்துண்டுகளைப் பயன்படுத்துதல்

- உதாரணமாக:- ஒரு போத்திலுள்ள படத்தில் நீர்த்துளி மேல்நோக்கி சிதறும் விதத்தைக் காட்டுகின்றமை மற்றும் மற்றைய சுற்றுத்துண்டின் படத்தில் நீர்ச்சுழி காண்பிக்கப்படுகின்றமை.
- ஒரு சுற்றுத்துண்டில் நீர் மூலம் தெளிவாக காட்டப்பட்டுள்ள போது மற்றைய சுற்றுத்துண்டில் ஏனைய விபரங்கள் உள்ளக்கப்பட்டிருந்தமை.
- ஒரு சுற்றுத்துண்டில் அலுவலக முகவரி குறிப்பிடப்பட்டுள்ளமை மற்றும் மற்றைய சுற்றுத் துண்டில் அவ்வாறு காணப்படாமை

ii. சுகாதார அமைச்சினால் CFA/BW/53/2013-03 என்ற பதிவு இலக்கம் அவர்களிற்கு 2013 மார்ச் மாதம் முதல் வழங்கப்பட்டிருந்த போதிலும், போத்தல்களில் ஒட்டுவதற்காக காணப்பட்ட சுற்றுத்துண்டுகளில் 2013 சனவரி 25 ஆந் திகதி என உற்பத்தி செய்யப்பட்ட திகதியும் 2014 சனவரி 25 ஆந் திகதி என காலாவதியாகும் திகதியும் குறிப்பிடப்பட்டிருந்தன. அத்துடன், 2012 நவம்பர் 06 ஆந் திகதி என உற்பத்தி செய்யப்பட்ட திகதியும் 2013 நவம்பர் 06 ஆந் திகதி என காலாவதியாகும் திகதியும் குறிப்பிடப்பட்டிருந்த முறையே 1,500 மற்றும் 7,000 மில்லி லீற்றர் சுற்றுத்துண்டுகள் அவதானிக்கப்பட்டதுடன், உற்பத்தி செய்வதற்கான அனுமதி கிடைப்பதற்கு முன்னரே அவர்கள் தமது உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளமை மற்றும் இந் நிலைமை நீர் போத்தல் உற்பத்தி நடவடிக்கைகளில் உரிய தரக்கட்டுப்பாடுகளின்றி இடம்பெற்றுவருகின்றமை என்பன இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

iii. 1000 மில்லி லீற்றர் போத்தல்களிற்காக பயன்படுத்தப்படுகின்ற சுற்றுத்துண்டுகளில் இலங்கையின் தேசியக் கொடி அச்சிடப்பட்டிருந்தமையும் அதன் மூலம் நீரின் மதிப்பை

அதிகரிப்பதற்கு முயற்சித்துள்ளமையும் அவதானிக்கப்பட்டது. அது 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டத்தின் 3(1) ஆம் பிரிவிற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கும் முரணானதாகும்.

iv. அவ்வாறே 2005 இன் போத்தலில் அடைத்தல் பிரமாணங்களின் பிரகாரம் போத்தல் உற்பத்தியாளரினதும் பொதியிடுவோரினதும் விநியோகிப்பவரினதும் பெயர் மற்றும் முகவரிகள் சுற்றுத்துண்டில் அச்சிடப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்த குடி நீர் போத்தல் உற்பத்தியாளர் 1000 மில்லி லீற்றர் மற்றும் 1500 மில்லி லீற்றர் போத்தல்களிற்காக அச்சிட்டிருந்த சுற்றுத்துண்டுகளில் உற்பத்தியாளரினதும் பொதியிடுவோரினதும் விநியோகிப்பவரினதும் பெயர் மற்றும் முகவரிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**சுட்டிக்காட்டல்**

உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவினால் சுற்றுத்துண்டில் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்காமையால் நுகர்வோர் திசைதிருப்பப்படுகின்றமையும் சிக்கல்களிற்கும் உட்படுத்தப்படுகின்றமையும்.

**பரிந்துரை**

i. சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவினால் தண்ணீர் போத்தல் உற்பத்தியாளர்களிற்கு புதிய பதிவினை வழங்கும் போதும் தற்போதுள்ள உற்பத்தியாளர்களின் பதிவினை புதுப்பிக்கும் போதும் அவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பல்வேறு இயலளவுடைய போத்தலிகளிற்காக பயன்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள சுற்றுத்துண்டுகள், சுற்றுத்துண்டிடுதல் பிரமாணங்களில் காண்பிக்கப்பட்டுள்ள சகல தேவைப்பாடுகளையும் நிறைவு செய்துள்ளதா என்பது தொடர்பில் கவனம் செலுத்தி அவ்வாறு பூரணப்படுத்தியிருந்தால் மாத்திரம் அந்த சுற்றுத்துண்டுகளை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குதல்.

ii. பின்வரும் விபரங்களை மூன்று மொழிகளிலும் அல்லது ஒரு மொழிக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் நீர் போத்தலின் மேற்பகுதியில் காண்பித்தல்

- இலங்கையினுள் உற்பத்தியாளரினதும் பொதியிடுவோரினதும் விநியோகத்தரினதும் பெயர் மற்றும் முகவரி
- பொருளின் இலக்கம் அல்லது குறியீட்டு இலக்கம் அல்லது இரகசியக் குறியீடு
- பதிவு இலக்கம்

**நிறுவனத்தின் கருத்துரை**

பந்தி 3.4 :- (ஆ) i– அவதானிப்பு சரியானது அல்ல.

**3.5 பிரதேச அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய களப் பரிசோதனைகள்**

உணவு அதிகாரச்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச அதிகாரிகளால் சுகாதாரமான முறையில் நீர் மூலங்களிலிருந்து நீர் பெற்றுக்கொள்ளப்பட்டது முதல் போத்தல்களில் அடைக்கப்பட்டு சந்தைக்கு வழங்குவதற்கு தயார்செய்யப்படல் வரையிலான நீர் போத்தல் உற்பத்திச் செயன்முறை உரிய நடைமுறைகளின் பிரகாரம் இடம்பெற்றுள்ளதா என்பதனையும் தொழிற்சாலையும் சுற்றியுள்ள சூழலும் சுகாதாரமான விதத்தில் பராமரிக்கப்பட்டுள்ளதா என்ற விடயத்தையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(அ) உணவுத் தளத்தினை பரீட்சிப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ள பிரதேச அதிகாரிகள், குறித்த இடத்திற்கு சமூகமளித்த தடவைகளின் எண்ணிக்கை உள்ளடங்கலான ஏனைய விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட பின்பற்றப்பட வேண்டிய நடைமுறையொன்று சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

(i) சுகாதார அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உணவுத் தரப்படுத்தல் நடைமுறையின் பிரகாரம் சிறந்த தரத்தில் காணப்படுகின்ற நிறுவனங்களிற்கு “A” தரப்படுத்தலும், திருப்திகரமான நிலையில் காணப்படுகின்ற நிறுவனங்களிற்கு “B” தரப்படுத்தலும், திருப்தியற்ற நிலையில் காணப்படுகின்ற நிறுவனங்களிற்கு “C” தரப்படுத்தலும், மிகத் திருப்தியற்ற நிலையில் காணப்படுகின்ற நிறுவனங்களிற்கு “D” தரப்படுத்தலும், வழங்கப்படுதல் வேண்டும்.

(ii) மேற்படி தர வரிசைப்படுத்தலிற்காக நிறுவனத்தின் உரிமையாளர்/ முகாமையாளரை தொடர்ச்சியாகப் பங்குபெறச் செய்தல் வேண்டுமென்பதுடன் அதன் மூலம் நிறுவனத்தின் உரிமையாளர்/ முகாமையாளருக்கு அவர்களது நிறுவனத்தில் தற்போது நிலவுகின்ற சுகாதார நிலைமைகள் தொடர்பில் புரிந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும். அதன்பின்னர் சுகாதார அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள H 800 படிவத்தினை இரண்டு பிரதிகளில் பூரணப்படுத்தி ஒரு பிரதியை நிறுவனத்தின் உரிமையாளர்/ முகாமையாளாருக்கு வழங்குவதோடு நிறுவனத்தில் எந்த வேளையிலும் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு வழங்குதல் வேண்டும். மற்றைய பிரதியை பொதுச் சுகாதார பரிசோதகர் தமது அலுவலகத்திலுள்ள குறித்த கோவையில் கோவைப்படுத்தி முறையாக

பேணிவருதல் வேண்டும். மீண்டும் பரிசோதனைகளின் போது H 800 படிவத்தின் இரண்டாம் படிவத்தினை பயன்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அதனையும் மேற்கூறப்பட்ட விதத்தில் இரண்டு பிரதிகளில் பூரணப்படுத்தி பரிசோதனை தடவைகளில் உணவு உற்பத்தி நிறுவனத்தை முன்னேற்றுவதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் வேண்டுமென்பதுடன் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iii) அவ்வாறே அந்த தர வரிசைப்படுத்தல் செயன்முறையின் பிரகாரம் C மற்றும் D தர வரிசையிலுள்ள நிறுவனங்கள் மாதமொன்றுக்கு ஒரு தடவையும் B தர வரிசையிலுள்ள நிறுவனங்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையும் A தர வரிசையிலுள்ள நிறுவனங்கள் 3 மாதங்களுக்கு ஒரு தடவையும் குறைந்தபட்சம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் உற்பத்தி நிறுவனங்களை தரப்படுத்தல் தொடர்பில் சுகாதார அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள H 800 படிவத்தில் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற அவதானிப்புக்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) மேற்குறிப்பிட்ட செயன்முறை தொடர்பான தெரிவுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட நிலைமைகள் கீழுள்ளவாறாகும்.

(i) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட எட்டு குடிநீர் போத்தல் உற்பத்தி நிறுவனங்களிடையே ஒரு நிறுவனம் தவிர்ந்த ஏனைய நிறுவனங்களிலுள்ள தொடர்புடைய முகாமையாளர்கள் அந்த H 800 படிவத்தினை சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்ததுடன் சில நிறுவனங்களுக்கு அந்தப் படிவம் குறித்த எண்ணமேனும் காணப்படவில்லை என்பது தெரியவந்தது.

(ii) அவ்வாறே H 800 படிவத்தினைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கும் குறித்த காலப்பகுதியினுள் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் வருகைதந்து அவதானிப்பை மேற்கொண்டிருக்கவில்லை. ஆகையால், இந்த குடிநீர் போத்தல் உற்பத்தி தொழிற்சாலை குறித்த சுகாதார வைத்திய உத்தியோகத்தரினதும் பொதுச் சுகாதார பரிசோதகர்களினதும் போதியளவு கவனத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கடமைப் பிரதேசம் மிக விரிவானதாக காணப்பட்டமையால் அவர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற எரிபொருள் படி போன்ற மீள்நிரப்பும் எதிர்பார்ப்பில் வழங்கப்படுகின்ற படிகள் உள்ளடங்கலாக தொழிலில் காணப்படுகின்ற சில பிரச்சினைகள் காரணமாக திருப்தியற்ற மனோநிலையில் சேவையாற்றி வருகின்றமை அவர்களுடன்

மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களிருந்து தெரிய வந்தது. இந் நிலைமை அவர்களைக் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டிய உணவு உற்பத்தி நிறுவனங்களின் பரிசோதனைச் செயன்முறையில் பின்னடைவுக்கு காரணமாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

**சுட்டிக்காட்டல்**

உணவு அதிகாரச்சட்டத்தின் கீழ் உணவு உற்பத்தி நிறுவனங்களை பரிசோதிப்பதற்கும் அவற்றின் தரத்தை மேம்படுத்துவதற்காக ஆலோசனைகளை வழங்குவதற்கும் அதற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கண்காணித்தல் நடவடிக்கைகள் போதியளவில் காணப்படாமை காரணமாக தரத்தில் குறைந்த குடிநீர் போத்தல்கள் சந்தைக்கு வருதற்குள்ள வாய்ப்பு அதிகமாயிருத்தல்.

**பரிந்துரைகள்**

i. சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிகாரம் சகல குடிநீர் போத்தல் உற்பத்தி நிறுவனங்களையும் உணவு தரவரிசைப்படுத்தல் செயன்முறைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்களிற்கு அறிவுறுத்தல் வழங்குதல்

ii. பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் குறித்த நிறுவனங்களின் தர வரிசைப்படுத்தலிற்கு அமைய அந்தந்த நிறுவனங்களை உரிய கால எல்லைகளில் கட்டாயமாக பரிசோதனைக்கு உட்படுத்தலும் அதனை உறுதிப்படுத்துவதற்காக H 800 படிவத்தினை நீர் போத்தல் உற்பத்தியாளரினாலும் பொதுச் சுகாதார பரிசோதகர்களினாலும் கோவைப்படுத்தி வைத்திருக்குமாறு அறிவித்தல்.

iii. தர வரிசைப்படுத்தல் செயன்முறையில் குறித்த நிறுவனம் பெற்றுக்கொண்ட தர வரிசைக்கமைய மேற்கொள்ளப்பட வேண்டிய பரிசோதனை தடவை எண்ணிக்கையினை உரிய கால எல்லையில் மேற்கொள்வதற்கும் நிறுவனத்தின் தரத்தை முன்னேற்றுவதற்கும் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

iv. பொதுச் சுகாதார பரிசோதகர்களின் சேவையினை இதற்காக உச்ச அளவில் பெற்றுக்கொள்வதற்கு கவனம் செலுத்துதல்.

**நிறுவனத்தின் கருத்துரை**

**3.6 நீர் மூலங்களை பரிசோதித்தல்.**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) CFA/BW/15/2012-02 ஆம் பதிவு இலக்கம் கொண்ட குடிநீர் போத்தல் உற்பத்தி நிறுவனத்திற்கு 2013 பெப்ரவரி 21 ஆந் திகதி வரை மாத்திரமே பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், பருவகால பரிசோதனை திகதியான 2013 மார்ச் 28 ஆந்

திகதி வரை அவர்கள் குடிநீர் போத்தல் உற்பத்தியிலும் அவ்வாறே சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) CFA/BW/22/2012-01 ஆம் பதிவு இலக்கம் கொண்ட குடிநீர் போத்தல் உற்பத்தி நிறுவனமும் குறித்த பொதுச் சுகாதார பரிசோதகருடன் இணைந்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் குறித்த ஆவணங்களான உணவுப் பதிவுச் சான்றிதழ், SLS தரச் சான்றிதழ், நீர் போத்தல்களுடன் தொடர்புடை புட்கிரேட் சான்றிதழ் (உணவுகளை தர வரிசைப்படுத்தல்) என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
இந்த நிறுவனம் 19 லீற்றர் நீர் போத்தல் உற்பத்தியினை அதிகமாக மேற்கொள்கின்றமை அவதானிக்கப்பட்டது. அதற்குத் தேவையான சுத்திகரிப்பு பரிசோதனை அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் பொதுச் சுகாதார பரிசோதகரின் வருகைகளும் லொக் குறிப்பேட்டில் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) CFA/BW/53/2012-02 ஆம் பதிவு இலக்கம் கொண்ட குடிநீர் போத்தல் உற்பத்தி நிறுவனம் முதற்தடவையாக 2007 ஆம் ஆண்டிலேயே உணவுப் பதிவுச் சான்றிதழை பெற்றுக்கொண்டிருந்தமையும் இப் திவு இலக்கம் 2010 ஆம் ஆண்டில் முடிவடைவதும் அவதானிக்கப்பட்டது. இந் நிறுவனம் மீண்டும் 2013 மார்ச் 08 ஆந் திகதியன்றே மீண்டும் பதிவுச் சான்றிதழை பெற்றுக்கொண்டிருந்ததுடன் அதற்கிடைப்பட்ட காலமான 02 ஆண்டுகள் 03 மாதங்களிற்கு மேற்பட்ட காலமாக தண்ணீர் போத்தல்களை சந்தைப்படுத்தியிருந்தது.

(ஈ) 2013 சனவரி 30 ஆந் திகதி பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவரினதும் சுகாதார மருத்தவ உத்தியோகத்தர் ஒருவரினதும் கையொப்பத்துடன் CFA/BW/53/2012-02 ஆம் இலக்க குடிநீர் போத்தல்கள் சந்தைப்படுத்தப்படுவதாக பணிப்பாளர், சுற்றாடல் மற்றும் தொழில்சார் சுகாதாரப் பிரிவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த குடிநீர் போத்தல்களை வழங்குவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து எழுத்துமூல விடயங்கள் வெளிப்பட்டிருக்கவில்லை. 2012 திசெம்பர் 26 ஆந் திகதி தொழில்சார் மற்றும் சுற்றாடல் சுகாதாரப் பதவியணியினரால் பதிவினை மீண்டும் புதுப்பிப்பதற்காக ஐந்து அவதானிப்புக்களை திருத்திக்கொள்ளுதல் வேண்டுமென சுட்டிக்காண்பித்திருந்த போதிலும், கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் திருத்தப்படாதிருக்கையிலும், 2013 மார்ச் 08 ஆந் திகதி பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

i. நீர் பொதியிடல் அறையினை, பொதியிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதுள்ள சந்தர்ப்பங்களில் உலர் நிலையில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் அங்கு உடைந்துள்ள சுவர்களை வெற்றிகரமாக திருத்தம் செய்யாதுள்ளமையுடன் தொடர்புடைய அவதானிப்புகள்

ii. Elbow tap, Auto door closer போன்ற தரமான உற்பத்திச் செயன்முறைகளை பயன்படுத்துவதுடன் தொடர்புடைய அவதானிப்புகள்.

iii. 19 லீற்றர் போத்தல்களை கழுவுகின்ற இடத்தில் அகற்றப்படுகின்ற நீரை குழாயொன்றின் மூலம் உறிஞ்சுவதற்கு இடமளித்திருத்தல்.

மேலும், இந்த நீர் உற்பத்தி தொழிற்சாலையின் சுற்றுச்சூழல் அசுத்தமான நிலையில் காணப்பட்டதுடன், 19 லீற்றர் வெற்று போத்தல்கள் தொழிற்சாலை வளவெங்கும் ஒழுங்கற்ற முறையில் வைக்கப்பட்டிருந்தன. புடவைக் கொடிகள் கட்டப்பட்டிருந்தமை, தொழிற்சாலைக் கழிவுகளை அகற்றாமை, போத்தல்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தமை மற்றும் போத்தல்களை சுத்தப்படுத்தும் நீரை நிலம் உறிஞ்சிக்கொள்ளும் விதத்தில் குழியினை வெட்டியிருத்தல் என்பன காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய விதத்தில் அக்குறைபாடுகள் திருத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், புதிய நீர் தாங்கிகள் அசுத்தமான நிலையில் காணப்படுதல், தாங்கியில் தவளைகள் காணப்பட்டமை, நீர் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள தாங்கிகள் மூடிவைக்கப்பட்டிருக்காமை, சந்தையிலிருந்து நிராகரிக்கப்பட்ட போத்தல்கள் உற்பத்திகளுடன் வைக்கப்பட்டிருந்தமை, ஒரு ஊழியர் மாத்திரம் அவதானித்தல் சந்தர்ப்பத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தமை, சீருடைகள், கையுறைகள், வாய் உறைகள் அணிந்திருக்காமை அத்துடன் ஊழியர்களிற்கான சுகாதார பாதுகாப்பு ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்காமை என்பன அவதானிக்கப்பட்டன. அவ்வாறே நீர் போத்தல் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களே நீரை போத்தலில் அடைக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தமை போன்ற அநேக விடயங்கள் குறித்த தொழிற்சாலை வளவில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பில் உறுதிப்படுத்தப்பட்டது.


நீரைச் சேகரிக்கும் தாங்கியின் உற்புரம்


நீர் போத்தல் தொழிற்சாலையின் அருகிலுள்ள கழிவுக் கால்வாய்


வெளியில் குவிக்கப்பட்டுள்ள பொலிதீன் பைகள்


நீர் போத்தல் தொழிற்சாலையின் சுற்றுச் சூழல்

(உ) CFA/BW/65/2007-04 ஆம் பதிவு இலக்கம் கொண்ட குடிநீர் போத்தல் உற்பத்தி நிறுவனத்தினால் 2012/13 ஆம் ஆண்டிற்காக வர்த்தக அனுமதிப்பத்திரம், நுண்ணுயிர் விஞ்ஞான இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை, சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம், கழுவுதல் பரிசோதனை அறிக்கை (19 லீற்றர் போத்தல்களிற்கான), உணவுப் பதிவுச் சான்றிதழ், SLS தரச் சான்றிதழ் மற்றும் நீர் புவியியல் அறிக்கை என்பவற்றை சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தமை.

பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 2013 ஏப்ரல் 09 ஆந் திகதி நீர் நிரப்புதல் தொழிற்சாலையில் இரண்டு பெண் பிள்ளைகள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் 1500 மில்லி லீற்றர் கொண்ட 240 போத்தல்கள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. நீரை நிரப்பும் பணிகளில் ஈடுபட்டிருந்த நிரந்தர பதவியணியினர் இருவர்களாக காணப்பட்டனர். இங்கு போத்தல்களை நிரப்புதல், துப்பரவு செய்தல், சுற்றுறையிடல், மூடியினை பொருத்துதல், போன்ற சகல நடவடிக்கைகளும் அவர்கள் இருவரினாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நீர் போத்தல் உற்பத்திப் பிரிவின் உபகரணங்கள் மற்றும் குறித்த இடங்கள் துசு படிந்து காணப்பட்டதுடன் நிலம் கழுவிச் சுத்திகரிக்கப்பட்டிருக்கவில்லை. கை கழுகின்ற இடம் கட்டிடத்திற்குள் நுழையும் இடத்தில் வெளிப்புறமாக அமைக்கப்பட்டிருந்ததுடன் கைகளை கழுவிகின்ற நீர் மீண்டும் கால்களை கழுவும் தாங்கிக்கு செலுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

இந்த வளவில் நடாத்தப்பட்டு வருகின்ற ஏனைய வணிக முயற்சிகளும் பிரிவுகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

i. தொலைத் தொடர்பு கம்பிகள் சார்ந்த உபகரண உற்பத்திகள்
ii. கம்பி ஆணி உற்பத்திகள்
iii. தொலைத் தொடர்பு விஞ்ஞான உபகரணங்களை இறக்குமதி செய்தல்
iv. C.D வானலைக்கொடிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசி சார்ஜர்ஸ் உற்பத்தி
v. தொலைத் தொடர்பு கம்பிகளுக்குத் தேவையான கொங்ரீட் உற்பத்திகள்

அவதானிப்புச் சந்தர்ப்பத்தில் இங்கு பல்வேறு உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன.

2 திறந்தவெளியில் கோழிக் கூடுகள் காணப்பட்டதுடன் ஒரு கோழி இறந்த நிலையில் காணப்பட்டது. குளாய் நீர் அருகே நாய்களை வைத்திருக்கும் பாரிய கூடொன்று காணப்பட்டதுடன் அதன் அருகே பல்வேறு மரக் குற்றிகளும் இரும்பு மற்றும் தொலைத் தொடர்பு உபகரணங்களும் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

இந்த இடத்திற்கு அண்மையில் தனியார் வீடொன்று காணப்பட்டதுடன் அந்த வீட்டுக்கு வந்து செல்வதற்கு வளவில் தற்காலிக நுழைவாயிலொன்று காணப்பட்டது. பாய்ச்சப்படுகின்ற நீரை

களஞ்சியப்படுத்தியுள்ள தாங்கி உரிய பிரகாரம் மூடி வைக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்படவில்லை.

இரண்டு குளாய்க் கிணறுகளை தவிர மற்றுமோர் வெட்டப்பட்ட கிணறும் வளவில் காணப்பட்டது. பரிசோதனை உத்தியோகத்தர்கள் வருகை தந்திருந்தமைக்கான அறிக்கைகள் நிறுவனத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றமை உறுதிப்படுத்தப்படாமையால் அவர்களது கண்காணிப்புகள் திருப்தியற்றதாக காணப்பட்டமை உறுதியாகியது.

(ஊ) CFA/BW/102/2008-06 ஆம் பதிவு இலக்கம் கொண்ட குடிநீர் போத்தல் உற்பத்தி நிறுவனத்தின் உணவுப் பதிவுச் சான்றிதழ் 2011 யூன் மாதத்தின் பின்னர் காலாவதியாகியிருந்தது. இருப்பினும், பதிவினை புதுப்பிப்பதற்காக எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவின் உத்தியோகத்தர்கள் அவ்வப்போது வருகை தந்திருந்த போதிலும், அது தொடர்பில் குறிப்புகள் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

நுண்ணுயிர் விஞ்ஞான பரிசோதனைகளுடன் தொடர்புடைய நீர் மூலங்களின் நீர் நியமத்துடன் இணங்காதிருந்ததுடன், உற்பத்தியை நிறுத்தி நாளதுவரையாக்கி மீண்டும் உற்பத்தியை ஆரம்பிக்குமாறு 2010 யூலை 16 ஆந் திகதிய அறிக்கையின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், உற்பத்தியை நிறுத்தாது தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டிருந்தது. உற்பத்தி பதவியணிக்காக ஏப்ரன் பாவிக்கப்பட்டிருக்காமை கணக்காய்வுத் திகதியான 2013 ஏப்ரல் 08 ஆந் திகதி அவதானிக்கப்பட்டது.

வளவின் எல்லைகள் கம்பி வேலி மூலம் பிரிக்கப்பட்டிருந்ததுடன் பூனைகளின் நடமாட்டமும் அவதானிக்கப்பட்டது. குளாய் நீர் கிணறு தயாரிக்கப்பட்டு 06 மாதங்கள் கடந்திருந்ததுடன் இந்தக் கிணற்றுக்குப் பதிலாக அதனைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், கணக்காய்வுத் திகதியான 2013 ஏப்ரல் 08 ஆந் திகதி வரை அதற்காக அங்கீகாரம் கிடைக்காதிருந்ததுடன் பழைய கிணற்றை பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. புதிய கிணறு தொடர்பான அறிக்கை சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

வளவினுள் இன்னும் தூய்மையினை மேம்படுத்துதல் வேண்டுமென்பது பொதுச் சுகாதார பரிசோதகரின் கருத்தாக இருந்தது.

(எ) பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 3 குடி நீர் போத்தல் உற்பத்தி நிறுவனங்களில் குறித்த கணக்காய்வுத் திகதிகளில் 2005 இன் உணவுப் பிரமாணங்களின் பிரகாரம் திருப்திகரமாக உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

**சுட்டிக்காட்டல்**

நுகர்வோருக்கு அங்கீகரிக்கப்பட்ட தரத்திலமையாத போத்தலில் அடைக்கப்பட்ட நீரை பயன்படுத்த வேண்டியேற்பட்டிருந்தமையால் உடல் ஆரோக்கியத்திற்கு பாதகமான தாக்கங்கள் ஏற்படுதல் மற்றும் நாட்டிலுள்ள சட்ட திட்டங்களை மீறி வணிகச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருத்தல்.

**பரிந்துரை**

i. நீர் போத்தல் உற்பத்தியின் ஆரம்பத்திலும் அவற்றை புதுப்பிக்கையிலும் குறித்த சட்டரிதியான ஏற்பாடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான நியமங்களில் காணப்படுகின்றனவா என்ற பரிசோதனை அறிக்கைகளின் படி உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவின் உத்தியோகத்தர்களினால் பரிசோதிக்கப்படல்.

ii. பதிவுசெய்யப்படாது அல்லது தரமற்ற முறையில் குடிநீர் போத்தல்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தொடர்பில் கண்காணிப்பை விரிவுபடுத்தல் மற்றும் குறித்த பிரமாணங்களை மீறுகின்ற உற்பத்தியாளர்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுத்தல்.

iii. பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்பை முறைப்படியாக விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

iv. சந்தையில் தொடர்ச்சியாக சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு தரமற்ற நீர் போத்தல் உற்பத்தி மற்றும் பதிவினை புதுப்பிக்காதுள்ள உற்பத்தியாளர்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை பின்பற்றுதல்.

v. இரசாயனக்கூட வசதிகளை மேம்படுத்துதல்.

**நிறுவனத்தின் கருத்துரை**

3.6 ஆம் பந்தி:- “ஈ(i) அவதானிப்பு சரியானதல்ல. குறைபாடுகள் திருத்தப்பட்டுள்ளதாக பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்ததன் பின்னர் பதிவு வழங்கப்பட்டுள்ளது.”

## 3.7 அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரிடமிருந்து கணக்காய்வின் போது பெறப்பட்ட நீர் மாதிரிகள் தொடர்பான பரிசோதனை அறிக்கை

இதன் கீழ் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழுள்ளவாறாகும்.

(அ) இரசாயன பகுப்பாய்விற்காக திறந்த சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 10 வியாபாரக் குறிகளைக் கொண்ட 10 உற்பத்திப் பொருட்கள் (10 நீர் மாதிரிகள்) இரசாயன

பரிசோதனைக்காக இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அந்த மாதிரிகளிலிருந்து 07 இன் P.H பெறுமதிகள் 2005 ஆம் ஆண்டின் உணவு (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர்) தொடர்பான பிரமாணங்களின் படி எதிர்பார்க்கப்பட்ட வீச்செல்லையான 6.5 – 8.5 இற்கு இடையில் காணப்படாமை அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழுள்ளவாறாகும்.

| **பதிவு இலக்கம்** | **தொகுதி இல.** | **காணப்பட்ட P.H. பெறுமதி** |
| --- | --- | --- |
| CF/A/BW/148/2013-05 | பீ 101327 | 6.2 |
| CF/A/BW/07 /2013-08 | 1350 | 6.2 |
| CF/A/BW/111/2012-08 | ஜேபீ - 010413 | 5.2 |
| CF/A/BW/101/2013-04 | 0001934 | 6.1 |
| CF/A/BW/133/2012-01 | 463 | 6.3 |
| CF/A/BW/140/2012-05 | 1500.09 | 6.1 |
| CF/A/BW/37 /2011-05 | 250813 | 5.8 |

(ஆ) 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் உணவு அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட பணிப்புரை நடவடிக்கைகளிற்காக அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர், அங்கீகரித்த இரசாயனப் பகுப்பாய்வாளராக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால், போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதியிடப்பட்ட நீர் தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள 2005 இன் பிரமாணங்கள் “ஆ” (B) பகுதியில் காண்பிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பரிசோதிப்பதற்கு இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்குள்ள இயலுமை தொடர்பில் இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு முகவரியிடப்பட்ட 2013 யூலை 31 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் அத் தேவைப்பாடுகளில் புளோரைட், சுவையூட்டிகள், அலுமினியம், சயனைட் மற்றும் பினொலிக் சேர்வைகளை பரிசோதிப்பதற்கு அவர்களிடம் வசதிகள் இல்லையென எமக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. குறித்த அதிகாரச்சட்டங்களின் மூலம் இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் முழுமையான இரசாயனப் பகுப்பாய்வு வசதிகள் காணப்படாமை சட்டரீதியான சிக்கல்களை தோற்றுவிக்கும் விடயமாகவும் நம்பகரமான இரசாயனப் பரிசோதனை அறிக்கையினை பெற்றுக் கொள்வதற்குள்ள வாய்ப்பு வரையறுக்கப்படுகின்ற விடயமென்பதும் அவதானிக்கப்பட்டது.

**சுட்டிக்காட்டல்**

இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கையின் படி நீர் மாதிரிகளில் காணப்பட வேண்டிய இரசாயனச் சேர்க்கைகள் எதிர்பார்க்கப்பட்ட அளவினைக் காட்டிலும் அதிகமாகக் காணப்பட்டிருப்பினும், அந்த நீர் போத்தல்கள் சந்தைக்கு விடுவிக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றமையால் அவை நுகர்வோருக்கு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றமை.

**பரிந்துரைகள்**

i. குறித்த இரசாயனச் சேர்க்கைகள் தொடர்பில், நீர் போத்தல் உற்பத்திக்காக அனுமதி வழங்கப்படுகின்ற ஆரம்ப வேளையிலும் பதிவினை புதுப்பிக்கையிலும் கண்டிப்பாக கவனம் செலுத்துதல்.

ii. நீர் மாதிரிகளை முறைப்படியாகவும் நம்பகரமான பெறுபேறினைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடனும் பரிசோதனைக்கு அனுப்பி வைப்பதற்கான வழிமுறையொன்றினை தோற்றுவித்தல்.

iii. உணவின் கீழ் கொண்டுவரப்படுகின்ற அனைத்து விடயங்களினதும் மாதிரிகளை பரிசோதிக்கையில் அவற்றை வினைத்திறனாகவும் மற்றும் சரியான பெறுபேற்றினை வழங்கும் விதத்திலும் சகல கூறுகள் தொடர்பில் பெற்றுக்கொள்வதற்கு வசதியான விதத்திலும் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் காணப்படுகின்ற வசதிகளை அதிகரித்தல் அல்லது சுகாதார திணைக்களத்தின் கீழ் அவ்வறான அனைத்து வசதிகளையும் கொண்ட ஆய்வுகூடமொன்றை ஏற்படுத்துவதற்கு கவனம் செலுத்துதல்.

**நிறுவனத்தின் கருத்துரை**

**3.8 பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பொறுப்புக்கள்**

நுகர்வோர் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் நியாயமான சந்தைப் போட்டியினை ஏற்படத்தவதற்காக இலங்கையில் செயற்படுகின்ற பிரதான நிறுவனமான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய குடிநீர் போத்தல் சம்பந்தமாக அதிகாரசபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள் தொடர்பில் விரிவான தகவல்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டதுடன் அத் தகவல்களை வழங்குகையில் குறித்த சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை உள்ளிட்ட விபரங்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதன் படி 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே 60 மற்றும் 100 எண்ணிக்கையான சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எமது தெரிவுப் பரிசோதனைகளின் படி நீர் மூலங்களில், தொழிற்சாலைகளில் மற்றும் சந்தையில் குடிநீர் போத்தல்கள் தொடர்பில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றமை வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தமையால் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட அவ்வாறான சுற்றிவளைப்புக்களிலும் வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த பல்வேறு குறைபாடுகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது.

இருப்பினும், அந்த சுற்றிவளைப்புக்கள் தொடர்பான விரிவான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அந்த நிறுவனத்தின் குடிநீர் போத்தல் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்பான பரிசோதனைகளின் பொருண்மையான தன்மை தொடர்பில் தெளிவான கருத்துரையொன்றை வழங்க முடியாதுள்ளது.

**சுட்டிக்காட்டல்**

கணக்காய்வின் மூலம் வெளிப்படுத்திக்கொள்ளப்பட்ட பல்வேறுபட்ட குறைபாடுகள் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களினூடாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமை.

**பரிந்துரைகள்**

i. சுற்றிவளைப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த குறைபாடுகள் பின்னர் திருத்தப்பட்டனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பின்தொடர் செயற்பாடுகளில் ஈடுபடுதல்

ii. சுற்றிவளைப்புக்களுடன் தொடர்புடைய தகல்களை உரிய பிரகாரம் ஆவணப்படுத்தி பேணிவருதல்.

## 3.9 கனிப்பொருட்களுடன் கூடிய நீரை இறக்குமதி செய்தல்.

இது தொடர்பான அவதானிப்புக்கள் கீழுள்ளவாறாகும்.

(அ) 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் பிரகாரம் உணவு ஆலோசனைச் சபையின் ஆலோசனைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டின் உணவு (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர்) தொடர்பான பிரமாணங்கள் 1 ஆம் பகுதியின் சாதாரண ஏற்பாடுகளிலுள்ள 3(1)(அ) பிரிவின் படி எந்தவொரு நபரினாலும் பிரதான உணவுகள் அதிகாரியிடமிருந்து அதற்காக பதிவுச் சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்ளாது கனிப்பொருட்களுடன் கூடிய நீரை இறக்குமதி செய்தல் மற்றும் விநியோகித்தல் கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அவ்வாறே 2005 ஆம் ஆண்டின் உணவு (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர்) தொடர்பான 4 ஆவது பிரமாணத்தின் பிரகாரம் எந்தவொரு நபருக்கும் பிரதான உணவுகள் அதிகாரியினால் உரிய விதத்தில் பதிவு செய்யப்படாத தண்ணீர் போத்தல்களின் பதிவுக்காக இலக்கமொன்று வழங்கப்படாத போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதியிடப்பட்ட இயற்கையான கனிப்பொருள் நீரை அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதியிடப்பட்ட குடிநீரை விற்பனை செய்தல், விற்பனைக்காக வைத்திருத்தல், போக்குவரத்து அல்லது பிரச்சாரம் செய்யக் கூடாதென குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) மேற்படி பிரமாணங்களுடனான இணங்கியொழுகுதல்கள் தொடர்பிலும் இலங்கைக்கு குடிநீரை இறக்குமதி செய்கின்ற நிறுவனங்கள் காணப்படுகின்றனவா என்ற விடயத்தை பரிசோதிப்பதற்காகவும் சுகாதார அமைச்சில் பதிவுசெய்யப்பட்டுள்ள நீர் உற்பத்தியாளர்களின் பட்டியலை பரிசோதிக்கையில் அவ்வாறான பதிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளர்கள் இல்லையென்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) இருந்த போதிலும், இந்த பிரமாணங்களிலுள்ள மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளை மீறி 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே 115,300, 207,447, 114,464 மற்றும் 102,461 லீற்றர்கள் குடிநீர் பல்வேறுபட்ட தனியார், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் உயர்ஸ்தானிகர் அலுவலகங்களால் இந் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை இலங்கை சுங்கத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(உ) சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தலைவராக பதவி வகிக்கின்ற உணவுகள் ஆலோசனைச் சபையில் இலங்கைச் சுங்கத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரது பிரதிநிதியொருவர் உள்ளடங்கியிருத்தல் வேண்டுமென 2011 இன் 24 ஆம் இலக்க உணவுகள் (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. இருப்பினும், நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட தண்ணீர் தொடர்பில் பொறுப்புவாய்ந்த தரப்பினரின் கவனம் திரும்பியிருக்காமை பிரதான உணவுகள் அதிகாரியிடமிருந்து பதிவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளாது நீரை இறக்குமதி செய்திருந்ததன் மூலம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) அவ்வாறே 2005 ஆம் ஆண்டின் உணவு (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர்) தொடர்பான பிரமாணத்தின் 3(6) ஆவது பிரிவின் பிரகாரம் இறக்குமதி செய்யப்படுகின்ற உற்பத்திப்பொருட்கள் தொடர்பில் பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரியினால் தனது விண்ணப்பப் படிவத்துடன் உற்பத்திப் பொருளின் மாதிரியொன்றையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூடத்திலிருந்து பெறப்பட்ட பகுப்பாய்வுச் சான்றிதழொன்றையும் பிரதான உணவுகள் அதிகாரிக்கு சமர்ப்பித்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே, விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று 07 நாட்களினுள் உணவுப் பதிவுச் சான்றிதழை வழங்க முடியுமா என்பது தொடர்பில் பரிந்துரையினைப்

பெற்றுக் கொள்வதற்காக நீர் மாதிரியும் பகுப்பாய்வுச் சான்றிதழும் குறித்த துறையில் அது தொடர்பில் நிபுணத்துவ அறிவுடைய நிறுவனமொன்றிற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறே, அந்த பிரமாணத்தின் 3(7) ஆம் பிரிவின் பிரகாரம் அந்த நிறுவனத்தினால் நீர் மாதிரிகள் தொடர்பில் தமது தொழில்நுட்ப அபிப்பிராயத்தை சமர்ப்பிக்கும் வரை பிரதான உணவு அதிகாரியினால் பதிவுச் சான்றிதழை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் கூடாதென காண்பிக்கப்பட்டுள்ளது.

(எ) இருந்த போதிலும், இந்த பிரமாணத்தின் மேலுள்ள "(ஊ)" இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை நிறைவேற்றாது இலங்கையினுள் கனிப்பொருள் அடங்கிய குடிநீர் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

சுட்டிக்காட்டல்

i. நாட்டில் அமுலிலுள்ள சட்டதிட்டங்களை கருத்திற்கொள்ளாமை
ii. பொது சுகாதாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்பிருத்தல்.
iii. உணவுகள் ஆலோசனைச் சபையில் செயற்படுகின்ற நிறுவனங்களிடையே பயனுள்ள தொடர்பாடல் இடம்பெறாமை
iv. அந்நியச் செலவாணி அவசியமற்ற விதத்தில் நாட்டிலிருந்து வெளியேறுதல்

பரிந்துரைகள்

i. சுங்கத் தகவல்களின் பிரகாரம் தற்போது குடிநீர் இறக்குமதியில் ஈடுபட்டுள்ள இறக்குமதியாளர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
ii. நீர் போத்தல்களை இறக்குமதி செய்தல் தொடர்பில் 2005 ஆம் ஆண்டின் உணவு (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர்) தொடர்பான பிரமாணத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடுகள் குறித்து இறக்குமதியாளர்களை அறிவுறுத்துதல்.
iii. 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டத்தின் 18(1), 19(1), 31(2) ஆம் பிரிவுகள் தொடர்பில் கவனம் செலுத்தி அதிகாரச்சட்டத்திலுள்ள பணிப்புரைகளை மீறுதல் தொடர்பான குற்றங்களுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
iv. உணவுகள் ஆலோசனைச் சபையில் செயற்படுகின்ற நிறுவனங்களிடையே முக்கியமாகத் தேவைப்படுகின்ற தகவல்களை தாமதமின்றி பரிமாறிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

நிறுவனத்தின் கருத்துரை

CFM/NMW/06/2013-04 ஆம் இலக்க இயற்கையான கனிப்பொருட்களுடன் கூடிய குடிநீர் போத்தல்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் தொடர்ச்சியாக அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டுள்ளன.

CFM/NMW/03/2011-07 மற்றும் CFM/NMW/02/2011-02 ஆம் இலக்கங்களைக் கொண்ட இயற்கையான கனிப்பொருட்களுடன் கூடிய குடிநீர் போத்தல்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களால் 2008 மார்ச் 14 மற்றும் 2011 பெப்ரவரி 14 ஆகிய திகதிகளில் ஓராண்டிற்காக இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் தற்போது இக் கம்பனிகள் இறக்குமதி நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளன.

உள்நாட்டு விமானக் கம்பனியொன்றினால் குறித்த விமானக் கம்பனியால் கோரப்பட்ட நீர் போத்தல்களே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன் உணவு ஆலோசனைச் சபை இலகுபடுத்திய கொள்கையொன்றின் மூலம் அவற்றை விடுவித்துள்ளது. இலங்கை நுகர்வோருக்கு அந்த நீர் போத்தல்கள் வழங்கப்படாதிருந்ததுடன் நாட்டுக்கு அந்நியச் செலாவணி இழக்கப்படும் என்பதனால் இவ்வாறு இடம்பெற்றுள்ளது.

இருப்பினும் எதிர்காலத்தில் ஒரு கொள்கலனுக்கு மேல் இறக்குமதி செய்யப்படுகின்ற நீர் போத்தல்களிற்கான பதிவுக்காக விண்ணப்பிப்பதற்கு இலங்கை கேடரின் சேர்விஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

உயர் ஸ்தானிகர் அலுவலகங்கள், நிர்மாண நடவடிக்கைகளிற்காக இந்நாட்டுக்கு வருகை தருகின்ற வெளிநாட்டுக் குழுக்களிற்காக பதிவுசெய்தலின்றி நீர் போத்தல்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆவ்வாறான சந்தர்ப்பங்களில் விரைவான நடைமுறையொன்றின் ஊடாக நீரை விடுவிப்பதற்கான தேவைப்பாடு காணப்படுவதுடன் பிரமாணங்களை திருத்தவேண்டிய தேவை உள்ளது.

3 தனியார் கம்பனிகளால் இறக்குமதி செய்யப்பட்டிருந்த இயற்கையான கனிப்பொருள் அடங்கிய குடிநீர் அக் கம்பனியினால் எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படுமாயின் பதிவுச் சான்றிதழலொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்த இறக்குமதியாளர்கள், சுங்கம் மற்றும் உணவுகள் இறக்குமதிக் கட்டுப்பாட்டு பிரிவு என்பன கோரப்பட்டுள்ளன.

இலங்கையில் நுகர்விற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற குடிநீர் போத்தல்கள் தொடர்பில் மிகவும் பயனுள்ள நடைமுறையொன்றை ஏற்படுத்துவதற்கு இலங்கை சுங்கம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## 4. கணக்காய்வு முடிவுரை

பயனுள்ள கைத்தொழிலாக நடாத்திச் செல்வதற்கு முடியுமான விதத்தில் போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட குடிநீர் கைத்தொழிலில் நுழைவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதுடன் இணைந்ததாக அத் துறையில் தரத்தினை உறுதிப்படுத்தி மிகவும் தரமுடைய உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத்துவதனை நோக்காகக் கொண்டு சுகாதார அமைச்சினால் அது தொடர்பில் சட்டங்களும் பிரமாணங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த பிரமாணங்களில் காணப்படுகின்ற இலகுவான பண்புகள் காரணமாக மோசடியான உற்பத்தியாளர்களிற்கு நிலவுகின்ற சட்டங்களை மீறி செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. பதிவுகளை புதுப்பித்தல் தொடர்பில் பொருத்தமான நடைமுறையொன்றை காணப்படுகின்ற பிரமாணங்களில் உள்ளடக்கியிருக்காமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாக காணப்பட்டது.

ஒரு சில பொது சுகாதார பரிசோதகர்களின் கடமை அதிகாரப்பிரதேசம் விசாலமாக காணப்பட்டமை காரணமாக அவர்களின் வெளிக்களப் பரிசோதனை நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இத் தொழிலில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்கள் குறித்த சட்டதிட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் நியமங்களுக்கு அமைய உற்பத்திகளை மேற்கொள்கின்றார்களா என்பதனை பரீட்சிக்கையில் இந்த உத்தியோகத்தர்களின் சேவை மிக முக்கியமானதாகும் என்பது அவதானிக்கப்பட்டது.

இந் நிலைமையின் கீழ் தற்போது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து உற்பத்தியாளர்களினதும் உற்பத்திப் பொருட்களின் தரம் தொடர்பில் சிக்கலான நிலைமை தோன்றியுள்ளதுடன் குடிநீரில் காணப்பட வேண்டிய நுண்ணங்கிகளும் இரசாயனச் சேர்க்கைகளும் குறித்த நியமத்தினுள் காணப்படுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தற்போது காணப்படுகின்ற நடைமுறைக்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் நிலவுகின்ற நியமங்களிற்கமைய பதிவுசெய்தல் நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துதல், சுகாதார அமைச்சிலுள்ள ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் ஆளணியினையும் ஆளணிக்கான வசதிகளையும் முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பன நுகர்வோர் ஆராக்கியத்தினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளாகும் என்பது அவதானிக்கப்பட்டது.

உற்பத்தியாளர்களால் உரிய காலத்துக்கு முன்னர் பதிவுக்காக விண்ணப்பம் செய்திருக்காத, பிரதேச உத்தியோகத்தர்களிடமிருந்து தொடர்புடைய தகவல்களைக் கோருதல் மற்றும் பிரதேச உத்தியோகத்தர்களினால் தகவல்களை அனுப்பிவைப்பதில் உள்ள தாமதங்கள்

| பதிவினை புதுப்பிப்பதற்காக விண்ணப்பித்திருந்த திகதி | பதிவுக்காக விண்ணப்பிக்க வேண்டிய திகதி | குறித்த மாகாணத்திலிருந்து (சு.சே.பணி. இடமிருந்து) தகவல்கள் கோரப்பட்ட திகதி | மாகாணத்திலிருந்து தகவல்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்த திகதி | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|---|
| தியதஹர 2010.05.24 | 2009.08.22 இற்கு முன்னர் | 2011.11.21 | 2012.12.05 | 2012.12.18 ஆந் திகதி வரை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. (2013.03.08 பதிவு வழங்கப்பட்டுள்ளமை களப் பரிசோதனைகளில் வெளிப்பட்டது) |
| டிப்ரொக் 2009.07.15 | 2009.01.28 இற்கு முன்னர் | 2009.09.08 | 2009.11.14 | இந்த விண்ணப்பம் தொடர்பில் 2010.07.14 ஆந் திகதியின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப் பட்டது. |
| 201203.23 இல் புதிய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (விண்ணப்பங்களுக்குத் தேவையான எல்லா ஆவணங்களையும் பூரணப்படுத்தி ஒப்படைத்துள்ள திகதி 2012.09.20 ஆகும்) | - | 2012.10.04 | 201.12.18 ஆந் திகதி வரை (கணக்காய்வுத் திகதி) பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | - |
| கூல்பெல் 2010.08.19 2010.09.19 ஆந் திகதியிடப்பட்ட விண்ணப்பப் படிவம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2012.01.27 ஆந் திகதி புதிய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2009.05.10 இற்கு முன்னர் | 2012.01.27 | 2012.09.14 | புதிய விண்ணப்பம் வழங்கப்பட்டது. 2012.12.07 CFA/BW/44/ 2012-12 |

| பதிவினை புதுப்பிப்பதற்காக விண்ணப்பித்திருந்த திகதி | பதிவுக்காக விண்ணப்பிக்க வேண்டிய திகதி | குறித்த மாகாணத்திலிருந்து (சு.சே.பணி. இடமிருந்து) தகவல்கள் கோரப்பட்ட திகதி | மாகாணத்திலிருந்து தகவல்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்த திகதி | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|---|
| சீ என்ட் டீ (கெப்டன்) | 2009.05.10 இற்கு முன்னர் | 2010.02.03 | 2010.03.17 | 2010.03.17 ஆந் திகதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் புதுப்பித்தலுக்காக பரிந்துரைத்திருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்காததுடன் 2011 ஆம் ஆண்டில் இது தொடர்பில் இடம்பெற்றிருந்த எவ்விதத் தகவல் பரிமாற்றமும் கோவையின் படி உறுதிப்படுத்தப்படாமை |
| சீ என்ட் டீ (கெப்டன்) | 2012.02.13 ஆந் திகதி பதிவை ஓராண்டுக்கு நீடிக்குமாறு கோரப்பட்டுள்ளது. | 2012.05.08 | 2012.11.28 | புதிய பதிவு வழங்கப்பட்ட திகதி 2013.02.15 (ஓராண்டின் பின்னர் ) |
| ஸ்ப்ரெளட் | 2009.01.28 | 2009.09.08 | 2009.11.05 | புதிய பதிவு வழங்கப்பட்ட திகதி 2011.01.07 |
| எக்ஸ்பிரஸ் | 2009.10.04 இற்கு முன்னர் | 2012.01.12 | 2012.06.14 | 2012.12.31 ஆந் திகதி வரை வழங்கப்படவில்லை. |

**பின்னிணைப்பு II**

செலுபடியான கால எல்லை கடந்த பின்னர் மீண்டும் செல்லுபடியான சான்றிதழொன்றை பெற்றுக்கொள்வதற்கு எடுத்த காலம்

| பதிவு இலக்கம் | செல்லுபடியான காலம் முடிவடைந்திருந்த திகதி | மீண்டும் செல்லுபடியான சான்றிதழ் பெறப்பட்ட திகதி | செல்லுபடியான சான்றிதழின்றி இருந்த காலம் |
|---|---|---|---|
| 1.CFA/BW/01/2012-02 | 28.07.2009 | 02.02.2012 | 1 ½ ஆண்டுகள் |
| 2.CFA/BW/06/2012-10 | 28.07.2009 | 10.08.2012 | 3 மாதங்கள் |
| 3.CFA/BW/08/2010-11 | 28.07.2009 | 06.10.2011 | 2 ஆண்டுகள் 3 மாதங்கள் |
| 4.CFA/BW/09/2006-07 | 28.07.2009 | 07.11.2012 | 3 ஆண்டுகள் 4 மாதங்கள் |
| 5.CFA/BW/11/2011-12 | 28.07.2009 | 20.12.2011 | 1 ஆண்டுகள் 5 மாதங்கள் |
| 6.CFA/BW/15/2012-02 | 28.07.2009 | 21.02.2012 | 2 ஆண்டுகள் 6 மாதங்கள் |
| 7.CFA/BW/17/2012-05 | 28.07.2009 | 15.15.2012 | 2 ஆண்டுகள் 10 மாதங்கள் |
| 8.CFA/BW/18/2011-01 | 28.07.2009 | 03.04.2012 | 2 ஆண்டுகள் 8 மாதங்கள் |
| 9. CFA/BW/19/2011-11 | 28.07.2009 | 03.04.2012 | 2 ஆண்டுகள் 8 மாதங்கள் |
| 10.CFA/BW/21/2012-04 | 31.08.2009 | 03.04.2012 | 2 ஆண்டுகள் 8 மாதங்கள் |
| 11.CFA/BW/22/2012-01 | 31.08.2009 | 09.01.2012 | 2 ஆண்டுகள் 5 மாதங்கள் |
| 12.CFA/BW/23/2011-03 | 31.08.2009 | 01.12.2010 | 1 ஆண்டு 3 மாதங்கள் |
| 13.CFA/BW/28/2012-01 | 31.08.2009 | 10.01.2012 | 2 ஆண்டுகள் 4 |

| | | | |
|---|---|---|---|
| 14.CFA/BW/29/2010-11 | 31.08.2009 | 03.11.2010 | 1 ஆண்டு 3 மாதங்கள் |
| 15.CFA/BW/35/2012-12 | 28.09.2009 | 21.12.2010 | 1 ஆண்டு 3 மாதங்கள் |
| 16.CFA/BW/37/2011-02 | 28.09.2009 | 22.02.2011 | 1 ஆண்டு 5 மாதங்கள் |
| 17.CFA/BW/40/2012-03 | 12.10.2009 | 02.03.2012 | 2 ஆண்டுகள் 5 மாதங்கள் |
| 18.CFA/BW/45/2012-02 | 16.11.2009 | 01.02.2012 | 2 ஆண்டுகள் 3 மாதங்கள் |
| 19.CFA/BW/46/2012-02 | 16.11.2009 | 21.02.2012 | 2 ஆண்டுகள் 3 மாதங்கள் |
| 20.CFA/BW/50/2011-11 | 27.11.2009 | 21.11.2012 | 3 ஆண்டுகள் |
| 21.CFA/BW/54/2007-02 | 22.02.2010 | 19.04.2012 | 2 ஆண்டுகள் |
| 22.CFA/BW/64/2012-05 | 11.04.2010 | 10.05.2010 | 1 ஆண்டு |
| 23.CFA/BW/73/2012-04 | 16.06.2010 | 25.04.2012 | 2 ஆண்டுகள் 9 மாதங்கள் |
| 24.CFA/BW/81/2012-01 | 08.08.2010 | 12.01.2012 | 1 ஆண்டு 5 மாதங்கள் |
| 25.CFA/BW/85/2007-10 | 01.10.2010 | 23.05.2012 | 1 ஆண்டு 7 மாதங்கள் |
| 26.CFA/BW/88/2007-11 | 01.11.2010 | 08.10.2012 | 2 ஆண்டுகள் 9 மாதங்கள் |
| 27.CFA/BW/89/2007-12 | 24.04.2010 | 17.01.2012 | 1 ஆண்டு 8 மாதம் |